ஹிங்குரக்கொட பிரதேச சபை - 2023
------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான சொத்துக்கள் பெறுப்புக்கள் பற்றிய கூற்று, தேறிய சொத்துக்கள் /உரிமை மூலதனம் மாற்றமடைதல் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான ஹிங்குரக்கொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன உள்ளுராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அது தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினர்களுக்கு உரியதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு

தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடய எல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரை மற்றும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பின்வரும் விடயங்கள் பற்றிப் பரிசோதிப்பதற்காக கணக்காய்வு விடய எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பிரதேச சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு இயலுமானவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் அளவு ரீதியாகவும் திட்டமிடப்பட்டுள்ளதா என்பது பற்றி மற்றும் குறித்த முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணப்பட்டு வருகின்றனவா என்பது பற்றி;

- ஏற்புடைய எழுதப்பட்ட சட்டம் அல்லது பிரதேச சபையால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட உத்தரவுகளுக்கு அமைவாக பிரதேச சபை செயற்பட்டுள்ளதென,

- தனது அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் பயனுள்ளவாறு கால வரையறைக்குள் மற்றும் ஏற்புடைய சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைச் செயன்முறை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டள்ளதென.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்;ராட்சி நிறுவனங்கள் பொருட்டான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாயம் 02இன் ஈ.ஜி.3.8 வெளிப்படுத்தலின்படி, ஆதனம்,பொறித்தொகுதி & உபகரணங்களின் தேய்மானம் சம்பந்தமாக தேய்மானமிடும் முறை மற்றும் சொத்துக்களின் பயன்பாட்டுக்காலம் அல்லது தேய்மான விகித குறிப்புக்கள்மூலம் வெளிப்படுத்த வேண்டியபோதிலும், ரூபா 47,418,952 ஆன மீளாய்வாண்டின் தேய்மானம் பொருட்டு அவ்வாறு வெளிப்படுத்தபட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படுமென. | உரிய கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உள்;ராட்சி நிறுவனங்கள் பொருட்டான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் வழங்கப்பட்ட அத்தியாயம் 2 இன் | குறிப்பு இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணைப்பு 1இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குக் குறியீடுகளின்படி, நூலகப் புத்தகங்கள் இருப்புக்களின் கீழ் சொத்தாக பதியபப்பட வேண்டியபோதிலும், பிரதேச சபையின் ரூபா 4,131,350 ஆன நூலகப் புத்தகங்களின் பெறுமதி குறிப்பு இல.16 இன் கீழ் ஆதனம், பொறித்தொகுதி & உபகரண பெறுமதியாக பதியப்பட்டிருந்தது. | | |
| (இ) | உள்;ராட்சி நிறுவனங்கள் பொருட்டான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாயம் 02இன் ஈ.ஜி.4.22 நீண்டகால கடன்களின் கீழ் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் ரூபா 45,856,189 கடன் மீதிக்குரிய வட்டி வீதம், கடன் காலப்பகுதி, கடன்பெற்ற திகதி, கடன் செலுத்த வேண்டிய திகதி, கடன் நிபந்தனைகள், நோக்கங்கள் பிணைகள் மற்றும் விசேட விடயங்கள் ஏதேனும் இருப்பின், அவற்றை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியபோதிலும் அதன்படி செயலாற்றியிருக்கவில்லை. | வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டு குறைபாடுகளைச் சரிசெய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட நாளேட்டு இல.102 காரணமாக, மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் கடன்பட்டோர் மீதி ரூபா1,650,098 பெறுமதியினால் குறைவடைந்திருந்தது. | பதில் குறிப்பிடப்படவில்லை. | ஆண்டிற்குரிய வருமானம் செலவுகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பின்வரும் வருமான விடயங்களை பதிவுசெய்கையில் உண்மையான பெறுமதியை விட குறைவாக பதிவுசெய்ததன் காரணமாக ஆண்டிற்கான வருமானம் ரூபா267,783 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது . | இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது | சரியாக வருமான தலைப்பினை இனங்கண்டு பதிதல் வேண்டும். |

| வருமான விடயம் | புதியப்பட வேண்டிய பெறுமதி | புதியப்பட்ட பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மலமகற்றுவதற்கான கட்டணம் | 271,200 | 315,873 | 179,783 |
| களியாட்ட வரி | 850,956 | 762,956 | 88,000 |
| | | | ---------- |
| | | | 267,783 |
| | | | ====== |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் பின்வரும் 02 வருமான விடயங்களை பதியும்போது உண்மையான பெறுமதியை விட அதிகமாக பதிவுசெய்ததன் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா237,618 ஆல் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியாக வருமானத்தை இனங்கண்டு பதிதல் வேண்டும். |

| வருமான விடயம் | புதியப்பட வேண்டிய பெறுமதி | புதியப்பட்ட பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மலமகற்றும் வண்டி வாடகை வருமானம் | 3,288,600 | 3,483,313 | 194,713 |
| வீதவரியும் வரியும் | 10,376,272 | 10,419,177 | 42,905 |
| | | | ---------- |
| | | | 237,618 |
| | | | ====== |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2022 ஆம் ஆண்டில், கணக்கில் பதியப்படாத உத்தியோகபூர்வ வீட்டு வாடகை வருமானம் ரூபா 240,900 மற்றும் நிலுவைத் வருமானம் ரூபா 34,600 என்பன பொருட்டு சீராக்கும்போது திரட்டு நிதியத்துக்கு ரூபா 206,300ஐ பற்று வைத்தமையினால் திரட்டு நிதியமானது, ரூபா447,200 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை இனங்கண்டு பதிதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் வீதவரி பொருட்டு வழங்கப்பட்ட தள்ளுபடி ரூபா 358,609 நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,488,287 எனக் காட்டப்பட்டதன் காரணமாக அந்தச் செலவு ரூபா 6,129,678 அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நாளேட்டு குறிப்பு மூலம் சரியாக சீராக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு பதிதல் வேண்டும். |

### 1.6.3 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் மீளாய்வாண்டு பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களினுள் சமர்ப்பிக்கப்பட்ட 16 கணக்கு விடயங்களின் மீதிக்கும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகளின்படி மீதிக்கும் இடையே ரூபா19,252,289 வேறுபாடு காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நாளேட்டு குறிப்பு மூலம் சரியாக சீராக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் கணக்கு புத்தகங்கள் மற்றும் ஏடுகளுடன் சமமாக வேண்டும். |

### 1.6.4 கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| கைத்தொழில் கடன்படுநர் | 26,204,118 | மீதிகளை உறுதிப்படுத்தல் | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என | பெறுமதிகளை பெற்ற விதம் பற்றிய உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| கைத்தொழில் கடன்கொடுநர் | 32,021,890 | சரியாக சீராக்கப்பட்ட கணக்கு, நாளதுவரையாக்கிய ஏடு | | |
| நாளேட்டு குறிப்பு 125 மூலம் கடன்கொடுநருக்கு பற்று வைக்கப்பட்ட பெறுமதி | 8,398,993 | பெறுமதிகளுக்காக உறுதிப்படுத்தல் | - | |
| | 66,625,001 | | | |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) தேசிய அரச பேரவையின் 1978இன் 41ஆம் இலக்க நகர அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் குறிப்பிட்டு வெளியிடப்பட்ட 2235/54 மற்றும் 2021 யூலை 08 திகதிய வர்த்தமானி | | | |
| VI பாகத்தின் பிரிவு 83(1) | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை வணிக கட்டடங்களுக்கான கடடடத் திட்டங்களை அங்கீகரித்து அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருப்பினும், 51 பேர் இணக்கச் சான்றிதழைப் பெற்றிருக்கவில்லை. | நகர அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1988இன் 56ஆம் இல. மற்றும் 2000 இன் 53ஆம் இல. சட்டங்களனால் திருத்தப்பட்டவாறான 1980 இன் 47 ஆம் இல. தேசிய சுற்றாடல் சட்டத்தின் பாகம் 23 “அ” | அதிகாரப் பிரதேசத்திலுள்ள தகனசாலை மற்றும் கழிவு அகற்றும் நிலையங்கள் பொருட்டு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | 2015 ஏப்ரல் 14 அம் திகதியன்று, பிரதேச சபையின் தலைவர் பயணித்தபோது, WPPF – 7366 இலக்கம் கொண்ட | இதுதொடர்பாக உள்;ராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தல் கோரப்பட்டுள்ளது என. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கெப் வாகனம் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமடைந்த போதிலும், இது தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படவில்லை. | | |
| (ii) | நிதிப்பிரமாணம் 396 (ஈ) | 06 மாதங்களுக்கு மேல் உள்ள வழங்கப்பட்டதெனினும், கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா49,182 றெுமதியான செலுத்துவதற்கு 06 காசோலைகள் தொடர்பாக செயலாற்றியிருக்கவில்லை. | 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகளை வருமானத்துக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 571(1) மற்றும் (2) | காலம் கடந்த வைப்புகள் தொடர்பாக பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றியிருக்கவில்லை. | இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் பட்டியல்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| (ஒ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் | 2019 திசெம்பர் முதல் 2023 யூலை வரை சபையின் அமய மற்றும் பதிலீட்டு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்த சம்பளங்களுக்கு ஏற்புடையதாக செலுத்த வேண்டிய 3 சதவீத உதவுதொகை ரூபா 432,132 செலுத்தாமையினால் மிகைக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. (201,142) | ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அறிவித்தலின்படி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவுகளை மிஞ்சிய வருமானம் ரூபா 2,159,038 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை மிஞ்சிய செலவு ரூபா 42,743,575 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,351,091 | 9,300,151 | 8,086,473 | 4,064,081 | 9,854,319 | 10,793,144 | 10,115,549 | 2,850,403 |
| (ii) | வாடகை | 34,469,004 | 14,194,996 | 15,524,102 | 11,517,190 | 37,687,276 | 23,010,550 | 17,635,820 | 12,846,296 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 2,222,500 | 2,442,490 | 2,310,120 | 1,286,153 | 3,198,750 | 1,853,443 | 1,115,219 | 1,153,783 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 11,126,145 | 9,486,450 | 8,147,476 | 7,834,234 | 11,683,872 | 5,634,270 | 4,866,140 | 6,495,260 |
| | | 58,168,740 | 35,424,087 | 34,068,171 | 24,701,658 | 62,424,217 | 41,291,407 | 33,732,728 | 23,345,742 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றுகை

சபையின் வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த வீதவரி, வரி வருமானம் ரூபா 4,064,081 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது | நிலுவை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இசைக் கச்சேரிகளுக்கான பொழுதுபோக்கு வரி வருவாய் டிக்கெட் மீது 10% என்றாலும், 09 இசைக் கச்சேரிகள் பொருட்டு அறவிடப்பட்ட வருமானம் ரூபா 258,320 ஆனமையினால் பொழுதுபோக்கு வரி வருவாய் மிக குறைநடத மட்டத்தில் காணப்பட்டது. | பொழுதுபோக்கு வரியை அறவிடுவதற்கான தற்போது பிரதேச சபையிலுள்ள பொறிமுறையில் குறைபாடுகள் உள்ளததினால், அவற்றை சரி செய்துகொள்வதற்கு எதிர்காலத்தில் | வருவாய்களை அறவிட்டுக் கொள்வதற்கு முறையான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று சபைக்குச் சொந்தமான கடைஅறைகளின் வாடகையிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 5,646,292 தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **ஏனைய வருமானங்கள்** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று நிலுவை கைத்தொழில்வரி, வியாபாபர வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் முறையே ரூபா 277,050, ரூபா 526,090 மற்றும் ரூபா 198,610 தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்குத் தேவையான வழிமுறைகளை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கைத்தொழில்வரி, வியாபாபர வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் பிற அதிகாரிகளிடமிருந்து 2023 திசெம்பர் 31ஆம் திகதியன்று வருமதி நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 41,065,781 மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 25,451,400 ஆக இருந்தன. | குறித்த தொகைகளை பெற்றுக்கொள்வதற்கு பட்டியல்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **துணைவிதி** | | |
| | பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் துணைவிதி விதிக்க வேண்டிய குடிநீர் விற்பனைக்கான துணைவிதி எதுவும் விதிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் இதற்கான துணைவிதியை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | துணைவிதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **செயல் நடவடிக்கைத் திட்டம்** | | |
| | வருடாந்த பாதீட்டு திட்டத்தின்படி சபையால் செய்ய வேண்டிய 14 பணிகளுக்கு ஆண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | 2024ஆம் ஆண்டுக்கான குறைபாடுகளை நிவர்த்திசெய்து செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தல் வேண்டும் |
| (இ) | **நிறைவேற்றாத செயற்றிட்டங்கள்** | | |
| | வருடாந்த பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 73,000,000 பெறுமதியான 14 செயற்றிட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்படவில்லை. | பாதீட்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது என்பதை மட்டும் ஏற்றுக்கொண்டனர். | பாதீட்டு திட்டத்தில் சேர்க்கப்பட்ட செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | **கைவிடப்பட்ட செயற்பாடுகள்** | | |
| | கடந்த வருடங்களில் 04 இலத்திரனியல் நூலகங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 5,344,186 செலவிடப்பட்டிருந்தபோதிலும், 2024 மார்ச் 26 ஆம் திகதியளவில் எதிர்பார்த்த பெறுபேறுகள் பெறப்படவில்லை. | எதிர்பார்த்த பெறுபேறுகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | **திண்மக்கழிவு முகாமைத்துவம்** | | |
| | அதிகாரப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் கழிவு முகாமைத்துவம் பொருட்டு 25 ஏக்கர் காணி பிரதேச சபைக்கு ஹிங்குராக்கொட பிரதேச செயலகத்தின் இல.34 ரொட்டவெவ கிராம அலுவலர் பிரிவில் 2019இல் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், அங்கு கழிவு முகாமைத்துவ நிலையம் அமைக்கப்படாததால், நிலையான திண்மக் கழிவு முகாமைத்துவ முறைமையொன்றை நிறுவி இருக்கவில்லை. | திண்மக் கழிவு நிலையமொன்றை அமைப்பதற்கு முன் காணியைச் சுற்றி மின் வேலி அமைப்பதற்கு அவசியம் என்பதனால், எதிர்காலத்தில் இந்த மின் வேலி அமைக்கப்பட்டதன் பினனர், கழிவு முகாமைத்துவ நிலையத்தின் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | திண்மக் கழிவு நிலையமொன்றை அமைத்து திண்மக் கழிவு முகாமைத்துவத்தை முறையாக நிறைவேற்றுதல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 27.15 மில்லியன் செலவுசெய்து எழுவோம் பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 92 கடை அறைகளைக் கொண்ட ஹிங்குராக்கொட பொது வர்த்தகதொகுதியை வாடகைக்கு விடுதல் பொருட்டு, ரெண்டர் நடைமுறைக்கு அப்பால் தலைவர் மற்றும் சபையின் தீர்மானங்களினால் வாடகை விடுவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக 04 வருடங்களாக செயலற்று காணப்படுவதுடன், இதன்படி மதிப்பீட்டு வாடகையின்படி கடந்த ஆண்டு முதல் சபை இழந்த வருமானம் ரூபா 25,263,200 ஆக இருந்தது. | ஹிங்குராக்கொட புதிய பொது வர்த்தகதொகுதியில் 92 கடைஅறைகளில் 75 பழைய கடை உரிமையாளர்களிடையே பகிர்ந்தளித்தலின் கீழ் முதல் கட்டமாக உள்;ராட்சி ஆணையாளரால் தெரிவு செய்து அனுப்பப்பட்ட 28 கடை உரிமையாளர்களில் 27 பேருக்கு ஒப்பந்த அடிப்படையில் கடையறைகள் வழங்கப்பட்டதுடன், இரண்டாம் கட்டத்தின் கீழ் சபையினால் தெரிவுசெய்யப்பட்ட 20 கடை உரிமையாளர்கள் மத்தியில் 7 கடைகளைப் பகிர்ந்தளித்தல் உள்;ராட்சி ஆணையாளரால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டத்தின் கீழ் ரெண்டர் கோரப்படவுள்ள 17 மேல் மாடி கடை அறைகளில் 8 கடை அறைகளுக்கு ரெண்டர் கோரப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 9 கடை அறைகள் பொருட்டு இரண்டாவது முறையாகவும் ரெண்டர் கோரப்பட்டுள்ளது எனவும், 75 கடை உரிமையாளர்களில் மேல் மாடியில் எஞ்சியிருக்கும் 27 கடை உரிமையாளர்களிடையே மேல் மாடியில் எஞ்சியுள்ள 27 கடை அறைகளை பகிர்ந்தளித்தல் மேற்குறிப்பிட்ட முதலாம், இரண்டாம் கட்டங்கள் முடிவடையும் வரை செயற்படுத்த முடியவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று சபையின் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் மூலம் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா6,357,978 ஆக இருந்ததுடன், அதில் எழுவோம் பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தி | இந்த நிலுவைத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக தற்போது சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கடிதங்கள் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | நிலுவைத் தொகைகளை அறவிட்டுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வேலைத்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில திட்டத்தின் கீழ் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குவதன்மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா3,122,898 உரிய செயற்றிட்டத்தை முடிவுறுத்தி 02 ஆண்டுகள் கடந்தபோதிலும் தீர்க்கப்படவில்லை.

## 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைப்பயன்பாட்டு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| ரூபா 36,079,412 பெறுமதியான சபைக்குச் சொந்தமான 13 சொத்துக்கள் மீளாய்வாண்டில் செயலற்று காணப்பட்டன. | | | |
| சொத்து | பெறுமதி<br>ரூபா | | |
| மின்னேரிய உப அலுவலக வளாகத்தில் உள்ள சோடி வீடு இல.01 | 2,800,000 | மின்னேரிய உப அலுவலக வளாகத்தில் உள்ள சோடி வீடு இல.04 மற்றும் மின்னேரிய உப அலுவலக வளாகத்தில் வீடு இல.02 என்றழைக்கப்படும் இரு உத்தியோகபூர்வ வீடுகளுக்கு இதுவரையில் எந்த அலுவலரும் அல்லது ஊழியரும் விண்ணப்பிக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது | சொத்துக்களை பாவனைக்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| மின்னேரிய உப அலுவலக வளாகத்தில் உள்ள சோடி வீடு இல. 02 | 3,200,000 | | |
| மின்னேரிய நூலக அருகிலுள்ள உத்தியோகபூர்வ வீடு | 2,800,000 | | |
| திராக்டர் - 37 ஸ்ரீ 5031 | 200,000 | ஏலவிற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது | ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| திராக்டர் RA-7618 | 850,000 | மானி செயலற்ற நிலையில் இருத்தல் மற்றும் பழுதுபார்த்தல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது | பழுதுபார்த்தல் வேண்டும். |
| பாதை இறுப்பாக்கி | 3,500,000 | இது தொடர்பாக பொறிமுறை பொறியியலாளர | பழுதுபார்த்தல் வேலை |

| | | | |
|---|---|---|---|
| | | பார்வையிட்டு உரிய பழுதுபார்த்தல் வேலைகளை மேற்கொள்வதற்கு பெறுகை நடவடிக்கை நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாமதித்தலாகாது. |
| மோட்டார் கிரேடர் | 14,680,000 | பொறிமுறை பொறியியலாளர் அறிவுறுத்தலின் பேரில், இங்கு இனங்காணப்பட்ட கோளாறு உள்ள டேன்டெம் பாகம் கொழும்பு டீசல் மோட்டார் அன்ட் இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதுடன், அங்கு பாகங்களை பிரித்த பிறகு, எங்களிடம் வழங்கப்பட்ட விலை மதிப்பீடு மிகவும் அதிகமாக இருந்தமையினால், அந்த விலையின் கீழ் பழுதுபார்ப்பதற்கு பொறிமுறை பொறியியலாளர் ஒருபோதும் உடன்படுவதில்லை எனவும், அவ்வாறு பிரித்த பாகங்களை மீண்டும் கொண்டு வருவதற்கான பரிந்துரையின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான பழுதுபார்த்தல் செய்து பாவனைக்கு எடுத்தல் வேண்டும். |
| சீமெந்து கல் வெட்டும் பொறி | 130,862 | தற்போது இந்த உபகரணத்திலிருந்து பயன் பெறுவதில்லை என்பதுடன் இதனை வாடகைக்கு எடுப்பதற்கான வாடிக்கையாளர் கோரிக்கைகள் எதுவும் கிடைக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | நீண்டகாலமாக பயனற்ற சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான தீர்மானம் எடுத்தல் வேண்டும். |
| றோனியோ டுப்லோ பொறி | 209,500 | எதிர்காலத்தில் விலைமனு கோரி பழுதுபார்த்தல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது | பழுதுபார்த்தல் வேலையை விரைவாக முடித்தல் வேண்டும். |
| கெப் வண்டி - PF-7366 | 6,390,000 | இந்த வண்டி கடும் சேதம் அடைந்துள்ளதால் அதனை பழுதுபார்ப்பதற்கு போதிய | நிதிப் பிரமாணத்தின்படி வகைகூற வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | | பணம் சபையிடம் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது | தரப்பினர்களை இனங்கண்டு இழப்பினை அறவிட்டு பழுதுபார்த்தல் செய்ய வேண்டும். |
| லொறி கெப் வண்டி - LF – 4837 | 1,319,050 | கையுதிர்ப்பதற்கு பரிந்துரை கிடைத்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | கையுதிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| தீயணைக்கும் வண்டி ZA-5435 | - | இந்த வாகனம் எமது சபை வளாகத்தில் உள்ளதுடன் பொலன்னறுவை மாநகர சபை இதற்கான உரிமையை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதால் இது தொடர்பில் அறிவுறுத்தல் கோரி உள்;ராட்சி ஆணையாளருக்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்த முடியாத சொத்துக்களை தேவையான இடத்துக்கு வழங்குதல் வேண்டும். |
| தீயணைக்கும் வண்டி 41 ශ්‍රී 8078 | - | தற்போது தீயணைக்கும் கூறு ஒன்று இல்லாததால், குறித்த வண்டியை நிறுத்திவைக்கையில் ஏற்படும் அனர்த்த நிலையை கருத்தில் கொண்டு, இந்த வண்டியை மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சிடம் ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்த முடியாத சொத்துக்களை தேவையான இடத்துக்கு வழங்குதல் வேண்டும். |
| | -------------- | | |
| மொத்தம் | 36,079,412 | | |
| | ======== | | |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹிங்குராக்கொட பிரதேச சபைக்குச் சொந்தமான 38 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை | தற்போது சபையின் வருமான நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளதுடன், எதிர்வரும் வரவுசெலவுத் | சொத்துக்களை பாதுகாப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுத்திவைப்பதற்காக மறைப்புடனான இடம் இல்லை. | | திட்டத்தில் இதற்கான நிதியை ஒதுக்கி, மிக விரைவில் வாகன மறைப்பு தளமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | அளித்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான இயங்காமல் மற்றும் பழுதுபார்க்கும் நிலையிலுள்ள 08 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான பழுதுபார்த்தல் வேலைகள் 02 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரை தாமதமாகியுள்ளன. | | | |
| | SD – 5183 | Sun Fang | ஓடுவதற்கு டயர் பெற அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை பாவனைக்கு எடுத்தல் வேண்டும். |
| | 37 ஸ்ரீ 5031 | Tractor FORD | ஏலவிற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரையின்படி செயலாற்றுதல் வேண்டும். |
| | JB 8453 | Tailor | பழுதடைந்த நிலையிலுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை பாவனைக்கு எடுக்காவிடின் உசிதமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | NCRA 8892 | Tractor | வயரிங் வேலைகளில் பழுதுபார்த்தல் இருப்பதனால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. | பழுதுபார்த்தல் தாமதம் அடைதலாகாது. |
| | 44 ஸ்ரீ 4563 | MASSY FERGUSON TRACTOR | பழுதுபார்க்கப்பட்டுவருகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பழுதுபார்த்தல் தாமதம் அடைதலாகாது. |
| | 25 ஸ்ரீ 9780 | MASSY FERGUSON TRACTOR | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல் தாமதம் அடைதலாகாது. |
| | 107 – 8341 | MASSY FERGUSON TRACTOR | பொறிமுறை பொறியியலாளரின் அறிவுறுத்தலின்படி | பழுதுபார்த்தல் தாமதம் அடைதலாகாது. |

| | | | |
|---|---|---|---|
| | | பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ஹிங்குராக்கொட உள்ளூராட்சி சபையில் உள்ள 06 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை | கைமாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது | கைமாற்றி பெறாத வாகனங்களை கைமாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையில் கருத்து தெரிவித்தல்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர்களின் எண்ணிக்கை 112 ஆக இருந்ததுடன், 78 நிரந்தர பதவியினர் மற்றும் 26 அமய, பதிலீட்டு ஊழியர்கள் பணிபுரிந்தனர் என்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வடமத்திய மாகாண உளளூராட்சி திணைக்களம் மற்றும் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு என்பனமூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் நிரந்தர பதவியினரில் அங்கீகரிக்கப்படாத பதவியினருக்குரிய 03 பதவிகளில் 06 ஊழியர்கள் தொடர்பாக செயலாற்றியிருக்கவில்லை. | கணக்காய்வுமூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, இந்த பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு எதிர்கால நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது | சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற, இடைநிறுத்தப்பட்ட, பணிநீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையில் இருந்து விலகிய 59 அலுவர்களிடமிருந்து நீண்ட காலமாக அறவிடப்படாமல் உள்ள ரூபா794,509 கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஊழியர் கடன்கள் 1988 இன் பதிவேடுகளில் இருந்து தொடர்ந்துவரும் கடன் மீதியாகும் என்பதுடன் தீர்ப்பதற்கான கோப்புகளை கண்டுபிடிக்கவும் முடியாதுள்ளது. | இந்த நிலுவை கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |